Y.M.C.A வாசிகசாலை

Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples' Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத வருஆனி மீ 22 ஆம் உ வெள்ளிக்கிழமை (06 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஃ 12 ஓசை 138

## லெட்சம் லீற்றர் மசகு டீசல் ராணுவ ஷெல்லினால் பஸ்மீகரம்

(காங்கேசன்துறை)

சிறிலங்கா இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலினால் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் எண்ணெய் தாங்கிகள் தீப்பற்றிக் கொண்டதால் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றும் எரிந்து கொண்டிருந்தன. கடந்த மூன்று நாட்களாக பலாலி இராணுவமுகாமைச் சூழவுள்ள பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் தொடர்ந்து சண்டை நடந்து வருகின்றது. நேற்று முன்தினம் கடும் சண்டை நடைபெற்றபோது பலாலியில் இருந்து பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் ஷெல் தாக்குதலின்போது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற் (4ஆம் பக்கம் பார்க்க)

# டில்லி சென்ற பேர்னாட் வெறுமனே திரும்பினார்!

## வி. பி. சிங், கருணாநிதி சந்திப்பு இல்லை குஜ்ரால் பயணமும் ஒத்திவைப்பு!

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் சிறிலங்கா அரசின் நிலையை இந்திய அரசுக்கு எடுத்துக்கூறி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசோ, தமிழ் நாடோ தலையிடாமல் தடுப்பதற்காக சிறிலங்கா ஜனாதிபதியின் விசேஷ பிரதிநிதியாகச் சென்ற சிறிலங்கா வெளியுறவுச் செயலர் பெர்னாட் திலகரத்தினா ''வெறுங்கையோடு'' கொழும்பு திரும்பிக்கொண்டிருக்கிறார்.

சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் விசேஷ பிரதிநிதியாக புதுடில்லி சென்ற சிறிலங்கா வெளிவுறவுச் செயலர் பெர்னார்ட் திலகரத்தினா புதுடில்லியில் வெளியுறவுச் செயலர் துபேயைச் சந்தித்துப் பேசியபின் இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலையும்தான் சந்தித்துப் பேசினார்.

ஒரு நாள் கூடுதலாக பெர்னார்ட் தில்கரத்தினா புதுடில்லியில் தங்கியிருந்த போதிலும் கூட பிரதமர் வி. பி. சிங்கைச் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

பெர்னார்ட் திலகரத்தினா புதுடில்லிச்குச் செல்வதற்கு முன்னரே, இலங்கையில் வடக்குக் கிழக்கில் மோதல் ஆரம்பமானபோது, 'இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடாது ஒதுங்கியிருப்பதே நல்லது' என்று வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் தெரிவித்திருந்தார்.

இதே கருத்தைத்தான் குஜ்ராலிடமிருந்து ''உறுதிமொழியாகப் பெற்றுக் கொண்டு'' பேர்னாட் கொழும்பு திரும்புகிறார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் படுகொலையைக் கண்டித்து தமிழகம் எங்கும் கண்டனக் கூட்டம்

### இ. காங்கிரஸ், அ. தி. மு. க. ஏற்பாடு

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டு வருவது குறித்தும், இதுவிடயத்தில் இந்திய மத்திய அரசு

தும் தமிழ்நாடு முழுவதும் பல கண்டனக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ், அகிலஇந்திய அ.தி மு.க

டங்கள் தொடர்ச்சியாக 9 ஆம் 10ஆம், 11ஆம் திகதிகளில் மாநிலம் தழுவியரீதியில் நடைபெறும்.

முதலாம் நாளான 9 ஆம்

## பன்குளத்தில் புலிகள் - ராணுவம் மோதல் பதினான்குபடையினர்பலி!

### ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(பன்குளம்)

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் பதினான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

பன்குளம் பகுதியில் நேற்று காலை பதினொருமணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது இதில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஏராளமான இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலின் போது பின்வரும் ஆயுதங்கள் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன அவையாவன

ஏ. கே எல் எம்.ஜீ-1, அதற்கான ரவைக்கூடு-1, ரீ-81 ரகதுப்பாக்கி-3, ரீ-56 - 2 ரகதுப்பாக்கி-5, ரீ 56 - 1 ரகதுப்பாக்கி - 4, ஜே. ஆர். எறிகுண்டு - 3, இடைத்தர ரவைகள் - 11000, ரீ. என். ரீ - 1, ஏ. கே. ரவைக்கூடு - 36, தொலைத்தொடர்பு சாதனம் - 1 ஆகிய இராணுவ உபயோக சாதனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கப்டன் திலகன்வீரமரணம்

பன்குளம் பகுதியில் நடந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் படையினர் கண்ணிவெடியில் கால்கள் இழப்பு

(கொழும்பு)

பலாலி முகாமிலுள்ள படையினரில் பலர் கண்ணிவெடியில் சிக்கிக் கால்களை இழந்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

மேற்படி முகாமிலுள்ளஇராணுவத்தினர் விமான நிலைய ஓடுபாதையை விஸ்தரிக்க முயற்சித்த பொழுது அங்கு புதைக்கப்பட்டிருந்த நிலக் கண்ணிவெடிகள் வெடித்ததைத் தொடர்ந்தே படையினர் பலத்த காயமடைந்ததாகவும், கால்களை இழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தேவாலயம் மீது ஹெலி தாக்கு நால்வர் பலி; மூவர் காயம்

(திருமலை)

நேற்றுக் காலையில் தச்சனூர் தேவாலயத்தின் மீது ஸ்ரீலங்கா இராணுவ ஹெலிகொப்டர் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புக்காக தங்கியிருந்த நான்கு பொதுமக்கள் பலியானார்கள்; மூன்றுபேர் பலத்தகாயமடைந்தார்கள்.

இதேவேளை நேற்று முன்தினமும் இப் பகுதியில் கொக்குத் தொடுவாய் என்னுமிடத்தில் பலத்த ஹெலிகொப்டர் தாக்குதல் நடைபெற்றது. தேவாலயம், பள்ளிவாசல், பாடசாலை ஆகிய பொது இடங்களின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலினால் அங்கு அகதிகளாக தங்கியிருந்த நான்கு பேர் பலியானதுடன்; மூன்று

### புடைவைகடையில் கொள்ளை

புத்தூர் பருத்தித்துறை வீதியிலுள்ள அம்பாள் ரேட் சென்றர் என்ற புடைவைக் கடையிலிருந்து நேற்று பெறுமதி வாய்ந்த பல புடைவைகள் கொள்ளையடிக்கப்பட்

### ஈ. என். டி. எல். எவ். குற்றச்சாட்டு

## இலங்கை உள் விவகாரத்தில் கருணாநிதி தலையிடுகிறார்

சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் விசேஷ பிரதிநிதியாக புதுடில்லி சென்ற சிறிலங்கா வெளிவுறவுச் செயலர் பெர்னார்ட் திலகரத்தினா புதுடில்லியில் வெளியுறவுச் செயலர் துபேயைச் சந்தித்துப் பேசியபின் இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலையும்தான் சந்தித்துப் பேசினார்.

வடக்குக் கிழக்கில் மோதல் ஆரம்பமானபோது, 'இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடாது ஒதுங்கியிருப்பதே நல்லது' என்று வெளியுறவு அமைச்சர்குஜ்ரால் தெரிவித்திருந்தார்.

இதே கருத்தைத்தான் குஜ்ராலிடமிருந்து ''உறுதிமொழியாகப் பெற்றுக்கொண்டு'' பெர்னாட் கொழும்பு திரும்புகிறார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் படுகொலையைக் கண்டித்து தமிழகம் எங்கும் கண்டனக் கூட்டம்

## இ. காங்கிரஸ், அ. தி. மு. க. ஏற்பாடு

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டு வருவது குறித்தும், இதுவிடயத்தில் இந்திய மத்திய அரசு கடைப்பிடித்துவரும் அசட்டையான போக்குகள் குறித்தும் தமிழ்நாடு முழுவதும் பல கண்டனக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ், அகிலஇந்திய அ.தி.மு.க ஆகிய கட்சிகள் இணைந்து நடத்தும் இக்கண்டனக் கூட்டங்கள் தொடர்ச்சியாக 9 ஆம் 10ஆம், 11ஆம் திகதிகளில் மாநிலம் தழுவியரீதியில் நடைபெறும்.

முதலாம் நாளான 9 ஆம் திகதி இருபத்திரண்டு முக்கிய நகரங்களிலும், இரண்டாம் நாளான 10ஆம் திகதி புதுக்கோட்டையிலும், மூன்றாம் நாளான 11ஆம் திகதி வட சென்னையிலும் இக்கண்டனக் கூட்டங்கள் இடம்பெறும்.

திண்டிவனத்தில் நடைபெறவுள்ள கண்டனக் கூட்டத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கண்மூடித்தனமான குண்டுவீச்சு; 8 பேர் மரணம்; 10 பேர்காயம்

(திருமலை)

வெருகல் முகத்துவாரம் பகுதியிலும் நேற்று விமானத் தாக்குதல்கள் கண்மூடித்தனமான முறையில் நடத்தப்பட்டுள்ளது இத்தாக்குதல் சம்பவத்தால் நான்கு பேர் பலியாகியுள்ளதுடன்; மூன்று பேர் பலத்த காயமடைந்துள்ளார்கள்.

அதேவேளை ஈச்சிலம்பற்றைப் பகுதியில் நேற்றுக் கடுமையான விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் நான்கு பேர் பலியானதுடன், ஏழு பேர் பலத்த காயமடைந்துள்ளார்கள்.

### கல்லடி இராணுவமுகாம்

# காவல் அரண் மீது தாக்குதல் இரு இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

கல்லடி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவல் அரண் மீதான தாக்குதல்களின் போது காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரில் இருவர் கொல்லப்பட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன் களஞ்சியத்தில் அரிசி எடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை களஞ்சிய அறையில் இருந்த 1600 தொன் அரிசி கடந்தவாரம் பாவனைக்காக எடுக்கப்பட்டுள்ளது.

இக்களஞ்சிய அறைக்கு அண்மையிலுள்ள காங்கேசன்துறை ராணுவ முகாமிலுள்ள ராணுவத்தினர் இப்பகுதிக்கு செல்ல அனுமதி தராததினாலேயே இங்கிருந்த அரிசி வெளியே எடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் மேற்கொண்ட முயற்சியில் இங்கிருந்த 1600 தொன் அரிசியும் கடந்த வாரம் வெளியே எடுக்கப்பட்டுள்ளது. (ம)

# பிரதீப் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், பலாலி முகாமில் தங்கியுள்ள படையினருக்கும் இடையில் நேற்றுக்காலையில் பலத்தமோதல் சம்பவம் இடம் பெற்றது. இம்மோதலில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த போராளி பிரதீப் வீரமரணம் அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

### யாழ். மாவட்டத்தில்

# 331 முகாம்களில் 43,558 குடும்பங்கள் பல்வேறு நிறுவனங்கள் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 4-7-90ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 331 முகாம்களில் 43,558 குடும்பங்கள் அகதிகளாகவுள்ளன. இங்குள்ள அகதிகளுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை பல ஸ்தாபனங்கள் கொடுத்து உதவி வருகின்றன.

இவற்றில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி ஆகிய பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள அகதி முகாம்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு நிதியமும், ரெட்பானா, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 83, அறவழிப் போராட்டக் குழு என்பனவும், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், உடுவில், மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) ஆகிய பகுதி உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளிலுள்ள அகதி முகாம்களுக்கு சர்வோதயம், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், வடகிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் என்பனவும்;

(4 ஆம் பக்கம் பார்க்க)

யில் சிக்கிக் கால்களை இழந்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

மேற்படி முகாமிலுள்ளஇராணுவத்தினர் விமான நிலைய ஓடுபாதையை விஸ்தரிக்க முயற்சித்த பொழுது அங்கு புதைக்கப்பட்டிருந்த நிலக் கண்ணிவெடிகள் வெடித்ததைத் தொடர்ந்தே படையினர் பலத்த காயமடைந்த

### ஈ. என். டி. எல். எவ். குற்றச்சாட்டு

# இலங்கை உள் விவகாரத்தில் கருணாநிதி தலையிடுகிறார்

(சென்னை)

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக தமிழக முதல் மந்திரி மு கருணாநிதி மீது ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி. எல். எப். ) குற்றம் சாட்டியுள்ளது.

முதல் மந்திரி கருணாநிதியின் தலையீடு விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கும் ஒரு நடவடிக்கை எனவும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி தனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளது.

# 302 படையினர் பலியாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இதுவரை 302 படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை வடபகுதி முழுவதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளதென ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா நகரில் இருந்து கிராமம்நோக்கி ஷெல் தாக்குதல்

(வவுனியா)

இராணுவத்தினரின் தாக்குதல் சம்பவங்கள் வவுனியாவில் தொடர்ந்து இடம்பெறுவதை அடுத்து வவுனியாவில் வாழு மக்கள் அச்ச நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

வவுனியாவில் நகரப் குதியில் நடமாடும் இராணுவத்தினர் தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் கிராமப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து ஷெல் மற்றும் துப் ாக்கிப்பிரயோகங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்காரணமாக நகரத்தில் இருந்து பலமைல் தூரத்தில் உள்ள கிராமங்களை நோக்கி மக்கள் நகர்ந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

இதேசமயம் வவுனியாவில் வாழும் மக்கள் மத்தியில் தற்போது பொருளாதார நிலையில் மிக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்கள் கடந்த மாதச்சம்பளத்தை பெற முடியாத நிலையில் தவிக்கின்றனர்.

இப்பகுதியில் உணவுப்பொருட்கள் மற்றும் எரிபொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. (தி)

# தமிழ்நாட்டில் 80 ஆயிரம் இலங்கைத்தமிழ் அகதிகள்

(சென்னை)

இதுவரை மொத்தமாக 80 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் தங்கியுள்ளதாக தமிழக முதல்வர் கலைஞர் மு கருணாநிதி நேற்று சென்னையில் நிருபர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் கடந்த 1983ம் ஆண்டுக்கு பிறகு வந்தவர்களென்று கூறிய அவர் அண்மைகால சம்பவங்களின்பின்பு கடந்த மூன்றாம் திகதி வரை 1500க்கு மேற்பட்டவர்கள் அகதிக

(4 ஆ பக்கம் பார்க்க)

### மாகாணசபை

# சட்டத்திருத்த மசோதா நேற்று பாராளுமன்றத்தில்

(கொழும்பு)

மாகாணசபை சட்ட திருத்த மசோதா நேற்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டதுடன் விவாதமும் நடத்தப்படலாயிற்று.

இந்த சட்டம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் ஆறாவதுசட்டத்துக்கு எதிராக செயற்பட்ட வடக்குகிழக்கு மாகாணசபை கலைககப்படுவதுடன், சபையின் அங்கத்தவர்களும் பதவி விலக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது

# மாற்று ஆடையின்றி திருமலை அகதிகள்

(முல்லைத்தீவு)

செம்மலை இறங்கு துறையில் நேற்று முன்தினம் வந்து சேர்ந்த திருமலைப் படகு அகதிகள் தரையிறங்கும் போது படகொன்று கவிழ்ந்தது. இதனால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் மாற்று உடையின்றி வந்த அன்னையர் சேலையில் ஒரு தலைப்பை உடலில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தேவாலயம் மீது ஹெலி தாக்கு நால்வர் பலி; மூவர் காயம்

(திருமலை)

நேற்றுக் காலையில் தச்சனூர் தேவாலயத்தின் மீது ஸ்ரீலங்கா இராணுவ ஹெலிகொப்டர் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புக்காக தங்கியிருந்த நான்கு பொதுமக்கள் பலியானார்கள்; மூன்றுபேர் பலத்தகாயமடைந்தார்கள்.

இதேவேளை நேற்று முன்தினமும் இப் பகுதியில் கொக்குத் தொடுவாய் என்னுமிடத்தில் பலத்த ஹெலிகொப்டர் தாக்குதல் நடைபெற்றது. தேவாலயம், பள்ளிவாசல், பாடசாலை ஆகிய பொது இடங்களின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலினால் அங்கு அகதிகளாக தங்கியிருந்த நான்கு பேர் பலியானதுடன்; மூன்று பேர் பலத்தகாயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

# புடைவைகடையில் கொள்ளை

புத்தூர் பருத்தித்துறை வீதியிலுள்ள அம்பாள் ரேட் சென்றர் என்ற புடைவைக் கடையிலிருந்து நேற்று பெறுமதி வாய்ந்த பல புடைவைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் தடுப்பதாலேயே உணவுகிடைக்கவில்லையாம்!

## - ரஞ்சனின் நொண்டிச் சாட்டு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதியில் நாம் செய்யும் உணவு விநியோகத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்துவதனாலேயே தமக்கு அப்பகுதியில் உணவு விநியோகத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதென பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா நேற்றுக் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த நிருபர்கள் மகாநாட்டில் பேசும் பொழுது இதனைத் தெரிவித்த திரு. ரஞ்சன் விஜேரத்தினா வடக்கு, கிழக்கு பகுதி வைத்திய சாலைகளை தமது போராளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# 50,000 மீனவர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் கடற்கரையோரமாக சிறிலங்கா கடற்படையினரின் நடவடிக்கைகளினால் கடலையே நம்பியிருக்கும் தொழிலாளர்கள் ஐம்பதினாயிரம் பேர் தற்போது வாழ வழிவகையின்றி தவிக்கின்றனர்.

தொடர்ந்தும் சிறிலங்கா கடற்படையினர் மீன் பிடித் தொழிலை திட்டமிட்டு அழித்துவருவதும், கரையோர கிராமங்களைநோக்கி பீரங்கி படகுகள் மூலம் தாக்கியும் மீன்பிடி படகுகளை அழித்தும்

(4ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே கருங்புலி மில்லரின் மூன்றாமாண்டு நினைவு அஞ்சலி இணைப்பு

## பால்மா உதவி

(யாழ்ப்பாணம்)

திருமலையிருந்து வந்து வன்னி மாவட்டங்களில் தங்கி உள்ள அகதிகளின் குழந்தைகளுக்கென் யாழ்மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சமாஜம் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா உணவுவகைகளை வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக வழங்கப்பட்டுள்ள இவ்உதவியில் குழந்தைகளுக்குத் தேவையான நெஸ்பிறே பால்மாவே கூடுதலாக உள்ளது. (75)

## யாழ். நகரில் 25 முகாம்களில் 5000 அகதிகள் தங்கியுள்ளனர்

(கொழும்புத்துறை)

யாழ். நகரப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 25 அகதி முகாம்களிலும் சுமார் 5 000 பேர் வரை தங்கியுள்ளனர்.

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி, ஒஸ்மானியாக் கல்லூரி, கொழும்புத்துறை சென் யோசப்மகாவித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலயம் உட்பட இருபத்தைந்து முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு இரண்டாவது வாரத்துக்கான உலர் உணவுப் பொருட்கள்விநியோகம் ஆரம்பமாகும் என அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்துள்ளார்.

முதலாவது வாரத்துக்கான உலர்உணவுவிநியோகம்கடந்த சனிக்கிழமையுடன் பூர்த்தியடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அகதிகளுக்குத்தேவையான சகல உதவிகளையும் சர்வோதயம், செஞ்சிலுவைச் சங்கம் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் வழங்கிவருகின்றன.

இந்த முகாம்களில் யாழ் நகரம், கொட்டடி, நாவாந்துறை, கண்ணபுரம், கரையூர், றெக்கிளமேசன், குருநகர், திட்டிமடம் வீதிப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களும், திருக்கோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களும் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் எடுத்த முயற்சியால் மாநகர ஊழியர்கள் குடிதண்ணீர், சுகாதார வசதிகளைத் திறம்படச் செய்துள்ளனர். (24)

## நாவற்குழி வீட்டுத் திட்டத்தில் தற்காலிக அகதிகள் முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டையை அண்டிய பகுதிகளில் இருந்தும் வெளி மாவட்டங்களில் இருந்தும் இராணுவ கெடுபிடிகளால் இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு நாவற்குழி வீட்டுத் திட்டத்தில் தற்காலிகமாக தங்குவதற்கு ஒவ்வொரு வீடு கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ் வீட்டுத்திட்டத்தில் சகல வசதிகளையும் செய்து கொடுப்பதில் அப்பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சிற்றூரவையினர் ஈடுபட்டுள்ளனர். குடியேறியோருக்கான வைத்திய வசதிகள் உணவுப் பொருட்கள் நீர்வசதி என்பன இப் பகுதியிலேயே பெற்றுக் கொள்ள கூடிய வகையில் வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

நாவற்குழி சிற்றூரவைத் தலைவர் எஸ். தில்லைநாதன் தலைமையில் நாவற்குளி வீடமைப்புத் திட்டத்தில் இடம் பெயர்ந்து தற்காலிகமாக குடியேறியோருக்கான உணவு வகைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் மருத்துவ வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக இக்குடியேற்றத் திட்டத்திலேயே ஒரு வைத்தியரையும் ஒழுங்கு செய்துள்ளனர் இவ் வைத்தியருக்கு தேவையான மருந்து வகைகளும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக இக்குடியேற்றத்திற்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (லோ)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

இரத்ததானம் செய்யவிரும்பும் பொதுமக்கள், பல்கலைக் கழக மாணவர்கள் ஆகியோர் மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலைக்கு இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணியளவில் சமுகம் தருமாறு யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 'ஓ' குறூப் இரத்த முள்ளவர்கள் முக்கிய மாகஎதிர்பார்க்கப் படுகிறார்கள்.

## இடம் பெயராதவர்களும் நிவாரணம் கோருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் தொழில்புரியும் கிளிநொச்சி, மன்னார், திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் தமக்கு இடம் பெயர்ந்த நிவாரணம் தருமாறு கிராம சேவையாளர்களைக் கேட்கின்றனர்.

இதனால் உண்மையாக பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களுக்கு இந்த நிவாரண உதவி வழங்க முடியாதிருப்பதாக கிராம சேவையாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிராம சேவகர்களுடன் இவர்கள்


## நியு விமாகி செரிமிக்ஸ்

தற்பொழுதுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக எமது ஸ்தாபனம் மானிப்பாயில் இலங்கை வங்கிக்கிளைக்கு முன்பாக இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

செரிமிக்ஸ்உற்பத்திப்பொருட்களும்மாபிள் கற்கள் போன்றவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.


# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இனரீதியான பாகுபாடு காட்டுகிறது

(யாழ்ப்பாணம்)

சிறீலங்கா அரசால் திணிக்கப்பட்ட யுத்தத்தில் சிதைந்து போயுள்ள ஈழத்தமிழ் மக்களுக்கு உதவி ஒத்தாசைகள் வழங்குவதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இனரீதியான பாரபட்சம் காட்டிவருகிறது என சில தகவலறிந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்கமானது அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கும் யுத்தத்தில் படுகாயமுற்றோருக்கும் தாராள உதவியை உரிய நேரத்தில் வழங்க வேண்டியதுவே அதன் கடமையாகும்.

இருந்தும் இலங்கையில் பதின்நான்கு கிளைகளைக் கொண்ட ஒருசங்கம் என இனம் காணப்பட்டு அதில் எட்டை வடக்கு கிழக்கு பகுதிகளில் கொண்ட ஒரு சங்கமாக கருதப்பட்டு வரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தமிழீழப்பகுதியில் யுத்தம் தொடங்கப்பட்டு ஏராளம் மக்கள் ஆதரவற்றோராக கைவிடப்பட்டுள்ள இவ் வேளையில் இம்மக்களுக்கு தேவையான ஒரு சிறு உதவியையேனும் இச்சங்கம் செய்யவில்லை.

வெளிநாடுகளில் இருந்து பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பணத்தை எமது மக்களுக்கு சேவை செய்யவென பெற்றுக்கொண்டுள்ள இச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புத் தலைமைப்பீடம் அப்பணத்தை தமது ஆடம்பர தேவைக்கும் உல்லாச வாழ்வுக்குமாக பயன்படுத்தி வருகிறது. பத்துரூபா பெறுமதியான ஒரு உதவியை ஒரு பொதுமகனுக்கு வழங்குவதற்காக தொண்ணூறு ரூபாவை செலவிட்டு வருகின்றனர் இந்த சங்க அதிகாரிகள் எனவும் அறியவருகிறது.

அத்துடன் வடபகுதியில் வைத்தியசாலைகள் மீது குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலை மீது சிறீலங்கா இனவாத இராணுவம் காட்டுமிராண்டித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மேற் கொண்டுள்ள போதிலும் இலங்கை அரசிடமோ அல்லதுசர்வதேசரீதியாகவோ சிறு கண்டனங்களையேனும் தெரிவிக்கவில்லை.

தற்போதய சூழ்நிலையிலும் தங்களால் ஆன உதவியை இதுவரை காலமும் கொழும்பிலிருந்து வடக்கு கிழக்கில் உள்ள எட்டு செஞ்சிலுவை சங்கங்களுக்கும் அனுப்பாது சர்வதேச செஞ்சிலுவை சங்கம் அளிக்கும் சிறு உதவிகளை மட்டுமே இந்த இலங்கை தலைமைப்பீடம் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சிகிச்சை நிலையம் இடம்மாற்றம் ஊழியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த மார்பு நோய் சிகிச்சை நிலையம் கோப்பாய்க்கு மாற்றப்பட்டுள்ளது என டாக்டர் திருமதி அரியரட்ணம் அறிவித்துள்ளார்.

இந் நிலையம் கோப்பாய் கிராமசபைக்குழு முன்னால் அமைந்துள்ள ஜே. ஏ. லூதர் என்ற தனியார் வீட்டிலே அமைக்கப்பட்டுள்ளதாகவும் இவர் தெரிவித்தார்.

இதற்கு முன்பாக முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்திருந்த இந் நிறுவனம் விமானத் தாக்குதலினால் சேதமுற்றது. இதன் காரணமாக இங்கிருந்த கருவிகளும், பொருட்களும் தளபாடங்களும் மேற்படி வீட்டிற்கு மாற்றப்பட்டுள்ளன.

எனவே இந் நிலையத்தில் கடமையாற்றிய சகல ஊழியர்களையும் கடமைக்கு தவ

## பெயர் ஒன்றானதால் செய்தி பிழைத்தது!

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டது டாக்டர் பரராசசிங்கம் அல்ல என்று இப்பொழுது தெரியவந்துள்ளது. வவுனியா ஆஸ்பத்திரி டாக்டர் பரா இராணுவத்தினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று வெளிவந்த செய்திகள் தவறானது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பரராசசிங்கம் என்ற சமூக சேவையாளர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட செய்தி யாழ்ப்பாணத்தை எட்டியபோது அது வவுனியா டாக்டர் பரராசசிங்கம் என்று கருதப்பட்டமையே தவறான செய்திக்கு காரணமாகும். (75)

## வலிகாமம் ப. நோ. கூ. சங்கம் தீவுப்பகுதிசங்கங்களுக்குஉதவும்

### கலந்துரையாடலில் முடிவு

(சுதுமலை)

தீவுப்பகுதி மக்களின் உணவு விநியோகம் தொடர்பாக சில முக்கிய முடிவுகள் நல்லூர்ப் ப. நோ. கூ. சங்கத்தில் நடைபெற்ற யாழ். குடாநாட்டுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி வலிகாமப் பிரிவில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் மேலதிகமாக உணவுப்பொருட்களைக் கையிருப்பில் வைத்து நெருக்கடியான காலகட்டங் ... பொருட்களை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் கடமையிலீடுபட்டுவரும் கூட்டுறவு ஊழியர்களுக்கு அபாய ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவேண்டுமென்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். பிரதேச முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் பங்கு கொண்ட மக்கள் வங்கி


### வரிவிளம்பரம்

இடம்மாற்றம்

அண்ணா கோப்பிக்கடை, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் மக்களுக்கு சேவை செய்யும் முகமாக திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். அண்ணா கோப்பி, திருநெல்வேலி.

(B-1223)

### விற்பனைக்கு

V. K. M. FARM CENTRE

எம்மிடம் சுகாதார முறைப்படி தயார் செய்யப்பட்ட முட்டையிடும் கோழித்தீனி ( Layermash ) விற்பனைக்கு உண்டு. தரமான புறொயிலர்ஸ் இறைச்சிக் கோழியும் விற்பனைக்கு உண்டு. இல: 12, கனசசபை லேன், (யாழ். இந்துக் கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம். (R398)


## பல்கலைக்கழக ஒன்றிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அங்கத்தவர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது. இதே வேளை மேற்படி ஒன்றியம், பல்கலைக்கழக வளாகத்துக்கு வெளியே எத்தக் கூட்டங்களையும் நடாத்தவில்லையாம்.

### முல்லைத்தீவில்

## காசுத் தட்டுப்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதுடன் பணமும் புழக்கத்தில் குறைவாக உள்ளது. வங்கிகள் இயங்காததே இதற்குக் காரணமாகும். தற்சமயம் மக்கள் வங்கிக் கிளைகள் மாத்திரம் இயங்கிக் கொண்டிருக்கின்றன இலங்கை வங்கி பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது. இலங்கை வங்கி ஊழியர்கள் வேலைக்குத் திரும்புவதால் இலங்கை வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டு பணம் புழக்கத்துக்கு வரும். (58)

பெயர்ந்து தற்காலிகமாக குடியேறியோருக்கான உணவு வகைகள் சேகரிக்கப் பட்டு வருகிறது.

மேலும் மருத்துவ வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக இக்குடியேற்றத் திட்டத்திலேயே ஒரு வைத்திய

## இடம் பெயராதவர்களும் நிவாரணம் கோருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் தொழில்புரியும் கிளிநொச்சி, மன்னார், திருக்கோணமலை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் தமக்கு இடம் பெயர்ந்த நிவாரணம் தருமாறு கிராம சேவையாளர்களைக் கேட்கின்றனர்.

இதனால் உண்மையாக பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களுக்கு இந்த நிவாரண உதவி வழங்க முடியாதிருப்பதாக கிராம சேவையாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிராம சேவகர்களுடன் இவர்கள் வாக்குவாதப்பட்டும் வருகின்றனர்.


## நியு விமாகி செரிமிக்ஸ்

தற்பொழுதுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக எமது ஸ்தாபனம் மானிப்பாயில் இலங்கை வங்கிக்கிளைக்கு முன்பாக இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

செரிமிக்ஸ்உற்பத்திப்பொருட்களும்மாபிள் கற்கள் போன்றவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(B/ 1222)


இந் நிலையம் கோப்பாய் கிராமசபைக்குழு முன்னால் அமைந்துள்ள ஜே. ஏ. லூதர் என்ற தனியார் வீட்டிலே அமைக்கப்பட்டுள்ளதாகவும் இவர் தெரிவித்தார்.

இதற்கு முன்பாக முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்திருந்த இந் நிறுவனம் விமானத் தாக்குதலினால் சேதமுற்றது. இதன் காரணமாக இங்கிருந்த கருவிகளும், பொருட்களும் தளபாடங்களும் மேற்படி வீட்டிற்கு மாற்றப்பட்டுள்ளன.

எனவே இந் நிலையத்தில் கடமையாற்றிய சகல ஊழியர்களையும் கடமைக்கு தவறாது சமுகமளிக்கும்படி டாக்டர் திருமதி அரியரட்ணம் கேட்டுள்ளார்.

## தீவுப்பகுதிசங்கங்களுக்குஉதவும்

### கலந்துரையாடலில் முடிவு

(சுதுமலை)

தீவுப்பகுதி மக்களின் உணவு விநியோகம் தொடர்பாக சில முக்கிய முடிவுகள் நல்லூர்ப் ப. நோ. கூ. சங்கத்தில் நடைபெற்ற யாழ். குடாநாட்டுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி வலிகாமப் பிரிவில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் மேலதிகமாக உணவுப்பொருட்களைக் கையிருப்பில் வைத்து நெருக்கடியான காலகட்டங்களில்அல்லது தேவை ஏற்படும் பட்சத்தில்தீவுப்பகுதி ப.நோ. கூ. சங்கங்கள் ஊடாகத் தீவுப் பகுதி மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் கடமையிலீடுபட்டுவரும் கூட்டுறவு ஊழியர்களுக்கு அபாய ஊக்குவிப்புப் பணம் வழங்கப் படவேண்டுமென்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். பிரதேச முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் பங்கு கொண்ட மக்கள் வங்கி யாழ். பிரதேச முகாமையாளர் தகவல் தருகையில் வியாழக்கிழமை (5. 7. 90) தொடக்கம் பிரச்சினைகள் எதுவுமற்று இயங்கக்கூடிய சகல வங்கிக் கிளைகளிலும் சகல கிளைகளுக்குமான காசோலைகளையும் ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதாக உறுதியளித்துள்ளார்.

யாழ். குடாநாட்டிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதேச இலங்கை வங்கி வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளது. (19)

## முல்லைத்தீவில் காசுத் தட்டுப்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதுடன் பணமும் புழக்கத்தில் குறைவாக உள்ளது. வங்கிகள் இயங்காததே இதற்குக் காரணமாகும். தற்சமயம் மக்கள் வங்கிக் கிளைகள் மாத்திரம் இயங்கிக் கொண்டிருக்கின்றன இலங்கை வங்கி பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது. இலங்கை வங்கி ஊழியர்கள் வேலைக்குத் திரும்புவதால் இலங்கை வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டு பணம் புழக்கத்துக்கு வரும். (58)

## வங்கி இயங்குகிறது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இலங்கை வங்கி கிளை தொடர்ந்து இயங்கி வருவதாகவும் இப்பகுதியில் நிலைமை அலுவலகம் இயங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை நிலவுவதால் இக்கிளை மூடப்படாது தொடர்ந்து இயங்கி வருவதாகவும் கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்

தினமும் காலை ஒன்பது மணிமுதல் குறிப்பிட்ட ஒரு சில மணிநேரம் பணம் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும் அறிவிக்கிறார். (லோ)


உங்கள் நீண்டகால பாவனைகளுக்குகந்த உறுதியான மரத் தளபாடங்கள்

## இணுவிலில்

- கட்டில்
- செற்றிகள்
- காரியாலய மேசைகள்
- கதிரைகள்
- மேசைகள்
- கண்ணாடி மேசைகள்
- ஷோகேஸ் வகைகள்
- காரியாலய அலுமாரிகள்

இன்னும் பலபல தளபாடங்களின் மொத்த விற்பனையாளர்கள்....

## நவரட்ணம் தச்சுத் தொழிற்சாலை

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு,

இணுவில்.

(B.1221)


வன்னிப் பகுதி

## வைத்தியசாலைகள் விரைவில் இயங்கும்?

(வவுனியா)

வன்னிப்பிரதேசத்தில் உள்ள சகல அரச வைத்தியசாலைகளும் மீண்டும் விரைவில் இயங்கத் தொடங்கவுள்ளன.

முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக ஸ்ரீலங்கா அரசுடன் ஏற்பட்ட மோதலின் காரணமாக அங்கு கடமையாற்றிய அரச வைத்திய சாலை ஊழியர்களும், வைத்தியர்களும் பலர் யாழ் மாவட்டத்திற்கு சென்றவர்கள் பின்னர் அப்பகுதிகளுக்கு போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தமையால் அப்பகுதிகளுக்கு இவர்களால் செல்ல முடியவில்லை. இதனால் அம் மாவட்டங்களில் இருந்த சகல அரச வைத்திய சாலைகளும் மூடிய நிலையிலேயே கிடந்தன. இதனால் அப்பகுதி மக்கள் மருத்துவ, மற்றும் சுகாதார வசதி இன்றி சிரமப்பட்டனர்.

ஆனால் சுகாதார அதிகாரிகளின் முயற்சியில் அப்பகுதிகளுக்குரிய பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப் பட்டமையால் அப்பகுதிகளைச் சேர்ந்த வைத்தியக் குழு தமது பிரதேசங்களுக்குச் சென்றுள்ளது. முல்லைத்தீவு வைத்தியசாலை வெள்ளிக்கிழமை திறப்பதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது. (ம)

## முல்லைத்தீவில் அகதிகளுக்கு அரசாங்க உதவி இல்லை

(முல்லைத்தீவு)

கிழக்கிலிருந்து புலம் பெயர்ந்து முல்லைத்தீவில் குடியேறிய மக்களுக்கு அரசாங்கம் இதுவரை எந்த உதவிகளும் வழங்கவில்லை. உயர் அதிகாரிகள் தகவல் சேகரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள். உதவிகள் வந்து சேரலாம் என்றும் சொல்லியுள்ளார்கள்.

கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் குடியேறியவர்களுக்கு முதன் முதலாக வடக்கு-கிழக்கு புனர் வாழ்வுக் கழகம் உதவிகளைமேற்கொண்டிருந்தது. இக்கழகத்தினூடாக வேறு சிலவெகுஜன அமைப்புக்களும்உதவி உள்ளன. (58)

## மரங்கள் தறிப்பதில் பெண்களும் ஈடுபடுகின்றனர்

(வல்வெட்டித்துறை)

பனை, தென்னை தறிக்கும் வேலையில் தற்போது வேகமாக பெண்களும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

வடமராட்சிப் பகுதியில் தற்போது பதுங்கு குழிகள் மூடுவதற்காக பனை, தென்னை போன்றவற்றின் குற்றிகள் தேவைப்படுகின்றன இதற்காக பெண்களும் கோடரி பிடித்து மேற்படி மரங்களைத் தறிப்பதுடன் பதுங்கு குழிகள் வெட்டுவதிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

வடமராட்சியில் தற்போது பதுங்குகுழி வெட்டுவதற்கு ரூபா 1500 வரை பேசப்படுகின்றது. (68)

## அகதிகளுக்கு உதவி செய்யவும்

(கொழும்புத்துறை)

இடம் பெயர்ந்துள்ள அகதிகளுக்கு சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்கள் தத்தமது பகுதிகளில் தம்மாலான உதவிகளைச் செய்யுமாறு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன நிர்வாகச் செயலாளர் அறிவித்துள்ளார்.


வெளிநாடுகளிலும், கொழும்பிலும் உள்ள உங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக கடிதங்கள், புத்தகங்கள், பார்சல்கள், தஸ்தாவேஜுக்கள்

ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்

DHL WORLDWIDE EXPRESS

# D.H. L. International Ltd;

C/o. **Cosmos Marketing Services**

*337, Kasthuryar Road, Jatfna.*

(B 965)



## குருக்கள் தேவை

சைவ ஆலயத்திற்கு நித்திய நைமித்திய பூஜை செய்யக் கூடிய குருக்களும், உதவி ஐயரும் தேவை. நேரில் யாவும் பேசலாம், உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திரு. து. சிவஞானசெல்வம்,
அறங்காவலர்,
மகாமாரி அம்மன் தேவஸ்தானம்,
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(R-397)

### சிந்தனைக்கு

முதன் முதலில் புனித வேடம் தாங்கிப் பொய்யைக் கடைப் பிடித்தது, சைத்தான்.

- ஜான் மில்ட்டன்.


ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 06-07-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05


# அரசின் கண்ணாமூச்சி விளையாட்டு

கண்ணாமூச்சி விளையாட்டு சிறுவர் சிறுமியர் மத்தியில் விருப்பமான விளையாட்டு. ஒருவரின் கண்களைத் துணியினால் கட்டியபின் மற்றவர்கள் வெவ்வேறு திசைகளில் நின்று வெவ்வேறு குரல்களில் சைகை கொடுப்பார்கள். கண்கள் கட்டப்பட்டிருப்பவர் அங்குமிங்கும் அலைந்து தட்டுத்தடுமாறி விழுந்து எழும்புவார்.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் சிறுவயதில் நன்றாகக் கண்ணாமூச்சி விளையாட்டில் ஈடுபட்டு இருந்திருக்க வேண்டும்.

சில தினங்களுக்கு முன்னர் மாமூடைகளை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு வந்திருந்தது.

காங்கேசன்துறைத் துறைமுகப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் தங்கி நிற்கிறது. பலாலி விமான நிலையத்திலிருந்து சிறிலங்கா இராணுவம் நடத்தும் ஷெல் தாக்குதல்கள் காங்கேசன்துறைப் பகுதிக்கு வந்து சேதப்படுத்துகின்றன.

பலாலி முகாம் ஷெல் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள டீசல் எண்ணெய்த் தாங்கியை பற்றி எரிய வைத்திருக்கிறது.

இந்த நிலையில் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இருந்து மாமூடைகளை இறக்குவதற்கு எந்தத் தொழிலாளியாவது அங்கு போகமுடியுமா? மாமூடைகளை அங்கிருந்து லொறிகளில் ஏற்றிச்செல்ல எவர் முன்வருவார்?

மாவு ஏற்றிவந்த கப்பல் திரும்பிச் சென்றுவிட்டது. யாழ்ப்பாணம் குருநகர் கடலுக்குச் சமீபத்தில் கப்பல்கள் நிறுத்தப்பட்டு அரிசி, மா போன்ற உணவுப் பொருள்கள் இதற்குமுன் பல தடவைகள் இறக்கப்பட்டு இருக்கின்றன. கொழும்புத் துறைமுகத்தில் வேலை நிறுத்தம் நடைபெற்ற சமயங்களில்கூட பகுதித் துறைமுகங்கள் கைகொடுத்து உதவின.

உண்மையிலேயே மாமூடைகள் இங்கு மக்களின் தேவையை நிறைவேற்ற அனுப்பப்பட்டிருந்தால் வேறு துறைமுகங்களில் இறக்கியிருக்க முடியும்.

ஆனால் மாவுக் கப்பலும் 'பிரேமதாசா அரசாங்கத்தின்

---

(நேற்றைய தொடர்ச்சி)

## ஸ்ரீ லங்கா அரசின்

# ராணுவ மயமாக்கப்பட்ட அரசியலும் அரசியல்மயமாக்கப்பட்டராணுவமும்

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே. ஆர். தனிமனித எதேச்சாதிகாரத்திற்கு ஏற்றாற்போல அரசியல் அமைப்புத் திட்டத்தை மாற்றி அமைத்தார். நிறைவேற்றதிகாரம் உள்ள ஜனாதிபதியானார். பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிதாவாத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர்களிடம் திகதி இடப்படாத ராஜினாமாக் கடிதங்களை வாங்கினார். பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை 6 ஆண்டுகள் நீடிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடாத்தி 52வீதம் வாக்குக்களைப் பெற்று 75வீதத்திற்கும் குறையாத தனது கட்சி ஆசனங்களைப் பேணிக் கொண்டார்.

இவை அனைத்தின் மூலமும் தன்னை கட்சியோ அன்றேல் பாராளுமன்றமோ எதிர்க்க முடியாத அளவிற்கு தனிப்பெரும் அதிகாரம் படைத்த எதேச்சாதிகாரியாகஜே ஆர். மாறினார். தனது எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நாட்டிற் கிளர்ச்சிகள் ஏற்படாது தடுக்கவும், இருக்கும் சு. க. இராணுவத்திற்குப் பதிலாக அதனை ஐ தே.க. இராணுவமாக மாற்றுவதற்குமாக இராணுவத்திற்குப் புதிதாக ஆட்சேர்க்கும் பணியில் ஜே. ஆர். ஈடுபட்டார். தமிழனை எதிர்ப்பதன் பேரில் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் படலம் துரிதகதியில் இடம் பெற்றது.

1958ஆம் ஆண்டு கலவரத்தின போது பண்டாரநாயக்காவால் நிர்வாகத்தை நடத்த முடியாத நிலை ஏற்படவே அவர் அப்போது மகாதேசாதிபதியாக இருந்த ஒலிவர் குணதிலகாவிடம் ஆட்சிப் பொறுப்பைத் தற்காலிகமாக ஒப்படைத்தார். ஒலிவர் இராணுவத்தைப்பயன்படுத்தி அந்தக் கலவரத்தைக் கட்டுப்படுத்தினார். ஆயினும்அதனை இராணுவ ஆட்சி என்றுசொல்லாமல் மகாதேசாதிபதி ஆட்சி என்றே அழைத்தனர். ஆனால் 1979ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திய ஜே ஆர் அரசாங்கம் வடபகுதியில் விடுதலைப் புலிகளைப் 'பூண்டோடு அழிக்குமாறு' கட்டளையிட்டு பிரிகேடியர்வீரதுங்காவை1979-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தது. உண்மையில் இதன் மூலம் இலங்கையின் ஒருபகுதி முதன் முறையாக இராணுவ ஆட்சியின் கீழ் வந்தது.

இவ்வாறு இராணுவம் அரசியல் நிர்வாகத்திற் பங்கும் பயிற்சியும் பெறத்தொடங்கியது.தென்னிலங்கையின் அரசியற்பொருளாதாரப்பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்கு தமிழ்ப் பகுதிகளில் ஜே ஆர். ஒடுக்கு முறைகளைத் துரிதப்படுத்தினார். இதற்கு இராணுவ பலத்தை வளர்க்க வேண்டி இருந்தது அத்துடன் எதிர்காலததில் தென்னிலங்கையில் எழக்கூடிய பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டும் இராணுவத்தினை வளர்க்க வேண்டி இருந்தது. இவ்விரு நோக்கங்களின் அடிபபடையில் இராணுவத்தினரையும் எஸ். ரி எவ். குண்டர் இராணுவததினையும் (பச்சைப் புலிகள்) ஜே. ஆர் வளர்த்தார்.

## சாரணன்

இவ்வாறாக அரசியலில் இராணுவத்தினர் அதிகரிக்கப்பட்டு ஈடுபடுத்தப்பட்டனர். 1987 ஆம் ஆண்டுவரை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவம் அரசியல் நிர்வாகததிற் பயிற்சி பெற்றது. 1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஜே. வி பி யை அடக்கும் பணியில் இதே இராணுவம் இலங்கையின் தென்பகுதியில் ஈடுபடுத்தப்பட்டது. ஜே ஆர். அரசாங்கத்தின் மீதான சகல அதிருப்திகளும் ஜே. வி. பி. அரசியலில் மையம் கொண்டது. இதனால் இராணுவத்தினருககு மிகக்கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவர்களின் கையில் சில பகுதிகள் முற்றாக ஒப்படைக்கப்பட்டன. இவற்றின் மூலம் இராணுவம் அரசியல் அதிகாரமும் நிர்வாக மெருகும் பெற்றது.

ஜே. ஆர். பதவியிலிருந்து இறங்கியபோது அரசியலை முழுக்க முழுக்க இராணுவ மயப்படுத்திவிட்டே இறங்கினார். இதனால் இராணுவமும் பெருமளவு அரசியல் மயப்பட்டேவிட்டது பிரேமா பதவிக்கு வந்ததும் ஜே. ஆருக்குவிசுவாசமானஇராணுவமே இருந்தது. ஜே. ஆரின் மகனான ரவி ஜெயவர்த்தனாவின் தலைமையிலான எஸ் ரி எவ் எனப்பட்ட ஆயுதம் தாங்கிய கும்பலைக்கண்டு அச்சமடைந்தார் ரவி ஜெயவர்த்தனாவை அந்த ஸ்தாபனத்திலிருந்து நீக்கி எஸ். ரி எவ்வை, ஐ ஜி. பி. யின் கீழ் கொண்டுவநதார்.

எது எவ்வாறு இருந்த போதிலும் ஜே. வி. பி யின் பிரச்சினையினால் இராணுவத்தின் கை எல்லா வகையிலும் ஓங்கியது. அது கட்டளைகளுக்காக வெள்ளை உடுப்பு அரசியல்வாதிகளைக் காத்திருக்கவில்லை. வெள்ளை உடுப்பு அரசியல்வாதிகள் இராணுவத்தின் தயவிலேயே தங்கி இருக்க வேண்டி இருந்தது. மதவைபவங்களிலும், ரூபவாஹினியிலும் பிரேமதாசா வெள்ளை உடுப்புடன் காட்சியளித்துக் கொண்டிருக்க இராணுவமே தென்னிலங்கையை எல்லா வகையிலும் ஆட்சி புரிந்தது இராணுவத்தின் அசைவுக்கு விட்டுக் கொடுக்கவும், அதன் கொடுங்கோன்மையை நியாயப் படுத்தவும் தவறுவாராயின் அது பிரேமதாசாவை மலையுச்சியில் இருந்து தரையில் வீழ்ந்தும் தன்மை வாய்ந்ததாகவே அமையும். இப்பின்னணியில் பிரேமா வெள்ளை உடைதரித்த இராணுவ ஆட்சியாளன் ஆனார்.

இப்பொழுது இந்த இராணுவம் தனது ஆட்சி அதிகாரத் தளத்தைத் தமிழீழம் நோக்கித்திருப்பி உள்ளது. தற்போது தமிழீழ மண்ணில் ஸ்ரீ லங்கா கட்டவீழ்த்து விட்டுள்ள இராணுவ அட்டூழியங்களை தென்னிலங்கையின் அரசியல் அதிகாரப் போட்டியின் முரண்பாடாகவும் நாம் பார்வையிட வேண்டும். தென்னிலங்கையில் வெடித்துள்ள அரசியல் அதிகாரப் போட்டி ஓட்டப் பந்தயத்திற்கு தமிழ் பேசும் மக்கள் சவாரிக் குதிரைகள் அல்ல என்பதை முழு உலகிற்கும் உணர்த்த வேண்டும்.

இவை அனைத்தின் மூலமும் நாம் ஒரு முடிவுக்கு வரலாம். அதாவது இன்று ஸ்ரீ லங்கா அரசானது ஜனநாயக அரசாகவன்றி இராணுவ ஆட்சி அரசாகவே உள்ளது. இந்த ஸ்ரீலங்கா இராணுவமானது ஹிற்லரின் நாஸிஸ இராணுவம் போன்றது. நாஸிஸ இராணுவமானது. தூயஆரிய வாதத்தை தனது சித்தாந்தமாகக் கொண்டது போல ஸ்ரீலங்கா இராணுவமானது சிங்கள - பௌத்தத்தை தனது சித்தாந்தமாகக் கொண்டுள்ளது. ஆதலினால் ஜேர்மனியின் நாஸிஸமும், ஸ்ரீலங்காவின் சிங்கள-புடிஸமும் ஒரே தரமும் தன்மையும் வாய்ந்தவையே.

(முற்றும்)

---

# சிறுபான்மையினர்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் -மண்டேலா

(லண்டன்)

பிரிட்டிஷ் அரசு ஜெரிஸ்

டும் எனவும் அவர் சொன்னார்.

படும் என்றும் அவர் சொன்னார்.

---

# லைபீரியாவில் ஜனாதிபதி பதவி விலகத் தீர்மானம்

(மொன்ரோபியா)

லைபீரியாவில் கிளர்ச்சிக்காரரின் நடவடிக்கைகளால் ஜனாதிபதி சாமுவேல் டோ பதவி விலகுவதற்கு தீர்மானித்துள்ளார்.

தமக்கும் அமைச்சர்களுக்கும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படுமானால் தாம் பதவியிலிருந்து விலகுவதாக அவர் கூறியுள்ளார்.

கட்டுப்பாட்டில் வந்துள்ளது. தொலைத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளது. விமான நிலையமும் மூடப்பட்டுள்ளது.

இங்குள்ள அமெரிக்க தூதுவர் ஜனாதிபதியுடன் பேச்சு நடாத்தியுள்ளார். அங்குபதற்றம் நிலவுகிறது.

தலைநகரின கிழக்கு மேற்கு பகுதிகளில் தொடர்ந்தும் சண்டை நடப்பதாக அங்கி

இருந்து மாமூடைகளை இறக்குவதற்கு எந்தத் தொழிலாளியாவது அங்கு போகமுடியுமா? மாமூடைகளை அங்கிருந்து லொறிகளில் ஏற்றிச்செல்ல எவர் முன்வருவார்?

மாவு ஏற்றிவந்த கப்பல் திரும்பிச் சென்றுவிட்டது. யாழ்ப்பாணம் குருநகர் கடலுக்குச் சமீபத்தில் கப்பல்கள் நிறுத்தப்பட்டு அரிசி, மா போன்ற உணவுப் பொருள்கள் இதற்குமுன் பல தடவைகள் இறக்கப்பட்டு இருக்கின்றன. கொழும்புத் துறைமுகத்தில் வேலை நிறுத்தம் நடைபெற்ற சமயங்களில்கூட பகுதித் துறைமுகங்கள் கைகொடுத்து உதவின.

உண்மையிலேயே மாமூடைகள் இங்கு மக்களின் தேவையை நிறைவேற்ற அனுப்பப்பட்டிருந்தால் வேறு துறைமுகங்களில் இறக்கியிருக்க முடியும்.

ஆனால் மாவுக் கப்பலும் பிரேமதாசா அரசாங்கத்தின் கண்ணாமூச்சி விளையாட்டுக்களில் ஒன்று.

உணவுப் பொருள்களும் மருந்து மற்றும் எரிபொருள்களும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் ஆனால் இப் பொருள்களை காங்கேசன்துறைத் துறைமுகத்தில் இறக்குவதற்கு விடுதலைப் புலிகள் தடையாக இருக்கின்றனர் என்று பிரேமதாசா அரசு கூறுகிறது.

கொழும்பிலிருந்து லொறிகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு உணவுப் பொருள்களும் மருந்துகளும் அனுப்பிவைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக அரசாங்கம் பலதினங்களுக்கு முன்னரேஅறிவித்திருந்தது.

பின்னர் கிழக்கு மாகாணத்துக்கு உணவு மருந்துப் பொருள்களை ஏற்றிக் கொண்டு லொறிகள் சென்று கொண்டிருப்பதாகவும்அரசாங்கம்அறிவித்தது.வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் வெளியிட்ட செய்திகளின்படி பார்த்தால் வடக்கிலும் கிழக்கிலும் எந்தப் பொருளுக்குமே தட்டுப்பாடு நிலவமுடியாது!

கொழும்பிலிருந்து உணவுப்பொருள்களை ஏற்றிவந்த லொறிகள் வவுனியாவுக்கு சமீபத்தில் விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுக் கொள்ளையடிக்கப் படுவதாக அரசாங்கம் இப்பொழுது கூறுகிறது.

வவுனியா மற்றும் மாவட்டங்கள் அரசபடைகளின் கட்டுப்பாட்டிலிருப்பதாகவும் மற்றும் பல இடங்களில் அரசபடைகள் முன்னேறிச் செல்வதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறுவது முழுப்பொய் என்பதையல்லவா உணவுப்பொருள்கள் வழியில் பறிக்கப்படுகிறதென்பது எடுத்துக்காட்டுகிறது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு உணவு மற்றும் மருந்து எரிபொருள்கள் அனுப்பப்பட்டு வருவதாக உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக பிரேமதாசா அரசு திறமையாகக் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடப் பார்க்கிறது.

சொந்தமண்ணிலேயே அதன் மக்கள் அடிக்கடி அகதிகளாகும் துர்ப்பாக்கிய நிலை இலங்கையில் தமிழ் மக்களுக்கே ஏற்பட்டுவருகிறது.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் சகலவற்றையும் இழந்து யாழ்.மாவட்டத்துக்குஅகதிகளாகி பெருந்துன்பம் அனுபவித்து வந்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கே உணவுப் பற்றாக் குறையுள்ள சமயத்தில் அகதிகளையும் கவனிக்கவேண்டிய நிலை.

வயிற்றுப்பசியோடு கண்ணாமூச்சி விளையாடுவது பெரும் அழிவைத்தான் தேடிக்கொடுக்கும் என்பது உலகவரலாறு.

இதனைப் பிரேமதாசா அரசு உணர்ந்து கொண்டால் சரி.

# சிறுபான்மையினர்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் -மண்டேலா

(லண்டன்)

பிரிட்டிஷ் அரசு ஜெரிஸ் தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தவேண்டும் என்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கூறியுள்ளார்.

ஆயுதபலத்தால் அடக்கு முறையை எந்த நாடும் பின் பற்றுவதை தான் கண்டிப்பதாகவும் சிறுபான்மையினர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் எனவும் அவர் சொன்னார்.

நெல்சன் மண்டேலா இவ்வாறு கூறியிருப்பது பிரிட்டிஷ் அரசுக்கு பிடிக் வில்லை என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

தென்னாபிரிக்க அரசு தொடர்ந்தும் இன ஒதுக்கல் கொள்கையை கடைப்பிடித்தால் அதன் மீதான பொருளாதார தடைகள் நீடிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறும் ஐரோப்பிய உச்சி மாநாட்டில் இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

## எயர் பஸ் விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும்

(புதுடில்லி)

விமானவிபத்து காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த உள்ளூர் 'எயர்பஸ்' விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க இந்தியன் எயர்லைன்ஸ் முடிவு செய்துள்ளது.

இதன்படி ஏ. 320 ரக இந்த விமானங்கள் இம்மாதம் மூன்றாவது வாரத்தில் இருந்து சேவையிலீடுபடுத்தப்படும்.

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற எயர்பஸ் விமானவிபத்து காரணமாக இச்சேவை இடை நிறுத்தப்பட்டது.

## மே.ஜேர்மனி ஆர்ஜென்டினா இறுதியாட்டம்

(டியூரின்)

உலகக் கிண்ண உதைபந்தாட்ட இரண்டாவது அரை இறுதியாட்டம் மே. ஜேர்மனிக்கு வெற்றியுடன் முடிவடைந்திருக்கிறது.

திறமையாக ஆடிய மே.ஜேர்மனியும் இங்கிலாந்தும் முதல் 90 நிமிட நேர விளையாட்டில் தலா ஒவ்வொரு கோல் மட்டுமே போட முடிந்தது. 59 ஆவது நிமிடத்தில் மே. ஜேர்மனிக்காக அன்றியா கிரேமே ஒரு கோல் போட, அடுத்து இங்கிலாந்துக்காக காரிலினேச்சர் 68ஆவது நிமிடத்தில் கோல்போட்டு சமனாக்கினார். இதன் பின் இச் சம நிலை உடைய முடியாது போயிற்று. தொடர்ந்து வந்த மேலதிக முப்பது நிமிட நேரத்திலும் இந் நிலையே நீடிக்க பெனால்டி மூலம் 4-3 என்ற ரீதியில் மே.ஜேர்மனி வெற்றியீட்டியது.

எனவே முதல் அரை இறுதி ஆட்டத்தில் வெற்றி கண்ட ஆர்ஜென்டீனா வரும் 8 ஆம் திகதி இறுதிப் போட்டியில் ரோமாபுரியில் மே.ஜேர்மனியை எதிர்த்தாடும்.

மே.ஜேர்மனி இறுதியாட்டத்துக்கு மூன்றாவது முறையாக தொடர்ந்து தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இதேவேளை ஆர்ஜென்டீனா தற்போதைய உலகச் சாம்பியனாகத் திகழ்கிறது என்பது அறிந்ததே.

## காஷ்மீரில் இராணுவம் மீது தாக்குதல்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் ஸ்ரீநகருக்கு செல்லும் பாதையில் ரோந்து சென்ற இந்திய இராணுவத்தின் மீது முஸ்லிம் தீவ்ரவாதிகள் தாக்குதல் நடாத்தினார்கள்.

இதில் நான்கு படையினர் பலியானார்கள். 10 பேர்வரை காயமடைந்தனர்.

மற்றொரு படையினர் மீதான தாக்குதலில் இருவர் காயமடைந்தனர்.

## கொர்பசேவ் அறிவிப்பு

(மாஸ்கோ)

தான் தெரிவித்துள்ள பொருளாதார சீர்திருத்த கொள்கையால் சோவியத் ரஷ்யாவில் அடுத்த இரு வருடங்களில் மாற்றங்கள் ஏற்படாவிட்டால் தற்போதுள்ள தலைவர்கள் பதவி விலக வேண்டும் என்று சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் கூறினார்.

## ஜோர்ஜ் புஷ் லண்டன் பயணம்

(வாஷிங்டன்)

நேட்டோ நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் லண்டன் பயணமானார்

## ராஜீவ் காந்தி கண்டனம்

(ஜெய்ப்பூர்)

இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிட சர்வதேச மன்னிப்புச் சபைக்கு உரிமையில்லை என்று முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

காஷ்மீர் பிரச்சினை காரணமாக இங்கு சர்வதேச மன்னிப்புச் சபைக்குழு வர விரும்பதையும் அவர் கண்டித்தார்.

## தெற்கில் சுருட்டுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

வடக்கு, கிழககு பகுதிகளில் சிகரட்டுக்கு தட்டுப்பாடு நிலவுவதுபோல தென்பகுதியில் இங்கிருந்து போகும் சுருட்டு, புகையிலைகளுககு தட்டுப்பாடு நிலவுகிறது.

அதிகரித்த விலையில் இவை அங்கு விற்கப்படுகிறது.

## லைபீரியாவில் ஜனாதிபதி பதவி விலகத் தீர்மானம்

(மொன்ரோபியா)

லைபீரியாவில் கிளர்ச்சிக்காரரின் நடவடிக்கைகளால் ஜனாதிபதி சாமுவேல் டோ பதவி விலகுவதற்கு தீர்மானித்துள்ளார்.

தமக்கும் அமைச்சர்களுக்கும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படுமானால் தாம் பதவியிலிருந்து விலகுவதாக அவர் கூறியுள்ளார்.

லைபீரியாவின் புறநகர் பகுதிகள் கிளர்ச்சிக்காரர்களின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. தொலைத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளது. விமான நிலையமும் மூடப்பட்டுள்ளது.

இங்குள்ள அமெரிக்க தூதுவர் ஜனாதிபதியுடன் பேச்சு நடாத்தியுள்ளார். அங்குபதற்றம் நிலவுகிறது.

தலைநகரின் கிழக்கு மேற்கு பகுதிகளில் தொடர்ந்தும் சண்டை நடப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மாநில அரசு- மத்தியஅரசு உறவை ஏற்படுத்த சபை

(புதுடில்லி)

மாநிலங்களுக்கு இடையிலான சபையின் முதலாவது கூட்டம்அடுத்த மாதம் 4 ஆம் திகதி பெங்களூரில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது

கர்நாடாக முதலமைச்சர் வீரேந்திரா பாட்டீஸ் இதனை முன்னின்று நடாத்தவுள்ளார்.

மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையேசிறப்பான உறவு நிலைகளை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த சபைஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியஅரசு மாநில அரசுகள் பேச்சு நடாத்தஇந்தசபை உதவும்.

## கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களின் விபரம தெரியாத பெற்றோர்கள் அம் மாணவர்களின் பெயர், விலாசம் போன்றவற்றை யாழ் பல்கலைக்கழக கலைபீட மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் பதிவு செய்து மேலதிக நடவடிக்கைக்கு உதவுமாறு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

இதேவேளை மட்டக்களப்பு அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள் பெயர்களை அவ்வப் பீட மாணவர் ஒன்றியங்களிடம் பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில் எரிபொருட்கள் பெரும் தட்டுப்பாடு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் எரிபொருட்களின் விலை மேலும் அதிகரித்துள்ளது எரிபொருட்கள் பெற்றோல் நிலையங்களுக்கு வரத்தில்லாத காரணத்தினாலும், பெற்றோல் நிலையங்கள் இயங்காத காரணத்தினாலும் எரிபொருட்கள் கள்ளச் சந்தைகளில் தான் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மண்ணெண்ணெயின் விலை லீற்றர் ஒன்று50ரூபாவாகவும் பெற்றோல் லீறறர் ஒன்று 125ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

வவுனியாவில் மின்சாரத் தடை பல பகுதிகளில் இருப்பதால், மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இரவுப்பொழுதுகளில் வெளிச்சத்திற்காகப் பல வீடுகளில் மெழுகு வர்த்திகள் ஏற்றப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

இராணுவத்தினரின் ஷெல் வீச்சில் மின்கம்பிகள் அறுந்து வீழ்ந்த காரணத்தினாலேயே பல பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (தி)

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# புடைவைக்கட்டில்அகதிகள்நிர்க்கதி!

## சர்வதேச செஞ்சிலுவையிடம் கோரிக்கை

திருமலை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான புடைவைக்கட்டில் நிர்க்கதியாகி அவதியுறும் ஐயாயிரம் மக்களை நேரில் வந்து பார்த்து அவர்களை அங்கிருந்து மீட்க அவசர உதவி வழங்குமாறு முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதியிடம் நேற்று உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுக் கிளையினர் இது தொடர்பான கடிதத்தை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி டாக்டர் பிலிப் கொன்ரெஸ்ராவிடம் கையளித்துள்ளார் கடிதத்தில்குறிப்பிட்டுள்ளதாவது:

'' வடக்கு - கிழக்கில் ஸ்ரீலங்கா அரசு தொடுத்துள்ள யுத்தத்தினால் எட்டு மாவட்டங்களிலுமாக மொத்தம் 6 லட்சம் பேருக்கு மேலானோர் வீடுவாசல்களை விட்டு வெளியேறி அகதிகளாகி உள்ளனர். இவர்களில் திருமலை மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கி ஓடிவந்த சுமார் ஒருலட்சம் பேரில் 5 ஆயிரம் பேர் கரையோரத்திலுள்ள எல்லைக் கிராமமானபுடைவைக்கட்டில் நிர்க்கதியாகி உள்ளனர்.

அரசபடைகளின் கொடூரமான தாக்குதல்களால்உடுத்த உடையுடன் கையில் ஏதுமின்றி ஓடிவந்த இவர்கள் புடைவைக்கட்டிலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்ல வள்ளத்திற்கு கட்டணம்செலுத்த முடியாத நிலையில் அங்கேயே தங்கி உள்ளார்கள். இவர்களை மீட்டெடுக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தான் உதவவேண்டும்.

அரசாங்கத்தினால்விநியோகிக்கப்படும் உலர் உணவுப் பொருட்கள் அநேகமான அகதிமுகாம்களுக்கு இன்னமும் போய்ச் சேராததால் இம்முகாம்களில் தஞ்சம் புகுந்தவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே அத்தியாவசிய உணவுப் பொருட்களை உடனடியாக வழங்க வேண்டும். தற்போது மூடப்பட்டுள்ள ஆஸ்பத்திரிகள் செயல்படத்தொடங்கும்வரை அகதிமுகாம்களில் அல்லது அவற்றுக்கு அருகில் மருத்துவசிகிச்சை நிலையங்களைத் திறப்பதற்கும் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கிராமிய வைத்தியசாலைகளிலும் மருந்தகங்களிலும் மருந்துக்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

பாதிக்கப்பட்ட இந்த மாவட்டங்களில் இடம் பெயர்ந்த மக்களின் இடர்பாடு ஒருபுறமிருக்க ஏனைய மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூட போக்குவரத்து வசதிகளோ எரிபொருள் விநியோகமோ முற்றாக ஸ்தம்பிதமடைந்த நிலையில் உள்ளன. இதனால் நோயாளர்களையோ காயமடைந்தவர்களையோ ஏற்றிச் செல்ல அம்புலன்ஸ் வண்டிகளை இயக்க முடியாதுள்ளது.

இந்த யுத்தம் கடந்த மாதம் 11ம் திகதி ஆரம்பமானதிலிருந்துமாவட்டங்களுக்கிடையிலும் வெளியிலும்சகல தொடர்புகளும் போக்கு வரத்துகளும் துண்டிக்கப்பட்டுள்ளமை மேலும் மோசமான நிலையை உருவாக்கி உள்ளது,

கடை கண்ணிகள் உட்பட சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. வங்கிகள் அனைத்தும் செயலிழந்துள்ளதுடன் மக்களின் பொருளாதார நாடிகள் முற்றும் முழுதாக ஸ்தம்பித்துள்ளன.

இந்த நிலையை ஓரளவிலேனும் போக்குவதற்கு சகல விதமான சரீர உதவியையும் நல்குவதற்கு பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள் தயாராகக் காத்திருக்கின்றன. எனவே முதலில் மருந்துக்கள், எரிபொருள், வாகனங்கள் ஆகியவற்றைத் தந்துதவுமாறு வேண்டுகிறோம்''

இவ்வாறு முல்லைத்தீ செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் கடிதம் மூலம் வேண்டியுள்ளது. (75)

### பயிலுநர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

அவ்வப் பகுதிகளில் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு பயிலுநர் ஆசிரியர்கள் ஒவ்வொரு வரும் தங்களால் இயன்ற உடைகள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றைச் சேகரித்துக் கொடுப்பதுடன், அகதிகள் முகாம்களில் சுகாதார நிலைமைகள், முதலுதவிச் சிகிச்சையளித்தல் போன்ற சேவைகளை நல்கும் படியும், இதற்குஉ.அ.அ.பிரிவுகளில் உள்ள கிளைகள் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியாகவும், பொது மக்களும் தாராளமாக உதவி செய்யும் படியும் பயிலுநர் ஆசிரியர் சங்கக் கிளைகளுக்கு பயிலுநர் ஆசிரியர் சங்கம் மேல்வரும்வேண்டுகோளினை விடுத்துள்ளது.

### வெகு ஜன அமைப்பு அறிவுறுத்தல்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட வெகுஜன அமைப்பு பொது மக்களின் நன்மை கருதி பின்வரும் அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது;

உணவைச் சேமியுங்கள், சிக்கனப் படுத்துங்கள், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள், சிதறி ஓடாதீர்கள், அது உங்களையும் மற்றவர்களையும் பாதிக்கும். உடனுதவி பயிலுங்கள். பதுங்குகுழிஅமையுங்கள். புலம் பெயர்வதில் அர்த்தமில்லை. பாதுகாப்பு நடவடிக்கை எடுங்கள்.(58)

### மகளைத் தேடும் தந்தை

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது தமது பதினாறு வயது மகளைத் தவறவிட்ட தந்தை ஒருவர் அகதி முகாம்களில் அவரைத் தேடி அலைகின்றார்.

திருகோணமலை பிறீமா ஆலையில் தொழில் புரியும் திரு. எஸ். பத்மநாதன் என்பவரே மகளைத் தவற விட்ட தந்தையாவார். இவரது மகளான பத்மவதனி என்பவர்

## அகதிக்கிராமத்தில் மேலும் புதிய அகதிகள்

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெற்று வரும் அசம்பாவிதங்கள் காரணமாக திருக்கோணமலை, வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் இருந்து சுமார் 400க்கும் மேற்பட்ட அகதிகள் கிளிநொச்சி ஜெயபுரம் பாடசாலையில் தங்கியுள்ளனர்.

1985 ஆம் ஆண்டு அகதிகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டது இக்கிராமம். இக்கிராம மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆரம்ப உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்கின்றனர்.

அத்துடன் சர்வோதயம் போன்ற தனியார் நிறுவனங்களும் உதவி புரிவதற்கு முன் வந்துள்ளன. (43)

## ஐஸ்கிறீம் தயாரித்தலை தற்காலிகமாக நிறுத்தவும்

### தமிழீழ ஆய்வு நிறுவனம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பால்மா, சீனி போன்ற பொருட்களைப் பயன்படுத்தி ஐஸ்கிரீம்தயாரித்தல் போன்ற தொழில்களைச் சிறிதுகாலம் நிறுத்துமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது பால்மா, சீனி போன்ற குழந்தைகளுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாலேயே இக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஐஸ்கிரீம் தயாரித்தல் போன்ற தொழில்களை மேற்கொள்ளும் போது பெருமளவு பால்மா, சீனி போன்றன பயன்படுத்தப்படுவதால் அதனைத் தடுக்கவே இந் நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## கோப்பாயில் தமிழீழ மீட்புநிதிக் கூட்டங்கள்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்காகிய தமிழீழ மீட்பு நிதி முதலாவது விளக்கக் கூட்டம் கடந்த செவ்வாயன்று நீர்வேலியில் அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா அவர்களால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சிற்றூர் அவைகள் மூலம் நடாத்தப்படவுள்ள கூட்டங்கள் வருமாறு:

| சிற்றூர் அவை | நடைபெறும் திகதி | நடைபெறும் இடம் |
|---|---|---|
| அச்செழு | 6. 7. 90 | சைவப்பிரகாச வித்தியாசாலை |
| புத்தூர் கிழக்கு | 7, 8. 7. 90 | சோமாஸ்கந்தா கல்லூரி |
| புத்தூர் மேற்கு | 9, 10. 7. 90 | ,, ,, |
| ,, ,, | 11. 7. 90 | நவக்கிரி அ. மி. த. க. பாடசாலை |
| ஆவரங்கால் | 12. 7. 90 | இராமலிங்கம் வித்தியாசாலை |
| அச்சுவேலி தெற்கு | 13. 7. 90 | சரஸ்வதி வித்தியாசாலை |
| அச்சுவேலி வடக்கு | 14. 7. 90 | அச்சுவேலி மகாவித்தியாலயம் |
| கதிரிப்பாய், தம்பாலை | 15. 7. 90 | சுப்பிரமணிய வித்தியாசாலை |
| வாதரவத்தை | 16. 7. 90 | விக்னேஸ்வரா வித்தியாசாலை |
| கோப்பாய் வடக்கு | 17, 18. 7. 90 | சரவணபவானந்தா வித்தியாசாலை |
| கோப்பாய் தெற்கு | 19. 7. 90 | நாவலர் பாடசாலை |
| ,, ,, | 20. 7. 90 | கோப்பாய் மகாவித்தியாலயம் |
| உரும்பிராய் வடக்கு, மேற்கு | 21, 22. 7. 90 | சைவத்தமிழ் வித்தியாலயம் |
| உரும்பிராய் கிழக்கு, தெற்கு | 23, 24. 7. 90 | ,, ,, |
| ஊரெழு | 25. 7. 90 | கணேச வித்தியாசாலை. |

## நிர்வாகக் கூட்டம்

வடக்கு - கிழக்கின் இன்றைய நிலை பற்றியும் இதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வதற்காக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றிய நிர்வாகக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு நிர்வாக உறுப்பினர் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

### புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலின் போது முன்னின்று இராணுவத்தினரை எதிர்கொண்டு போராடிய கப்டன் திலகன் வீரமரணம் அடைந்துள்ளார் என்பது குறிப்பிடதக்கதாகும். (லோ)

### டில்லி சென்ற

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குடி

## காயமடைந்த போராளிகளுக்கு மக்கள் தெம்பூட்ட வேண்டும்

(சாவகச்சேரி)

போராட்டக் காலங்களில் காயம்பட்ட போராளிகளுக்கு பொது மக்கள் ஆதரவளிக்க வேண்டும். அவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டும். வசதிப்படின் இளநீர், பழவகை வழங்கப்பட வேண்டும். ஏதாவது உணவு வகை தயார் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் தாம் அனாதைகள் என்ற உணர்வை அகற்ற வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு பாப்பா பொதுமக்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மேலும் திரு. பாப்பா கூறியதாவது:-

போராட்டக் காலங்களில் பொது மக்கள் போராளிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு அத்தியாவசிய பணிகளைக் கவனிக்க வேண்டும். பங்கர்களை அமைக்க உதவுதல் வேண்டும் இதை விட முக்கியமாக மக்கள் மனதிலுள்ள தவறான கருத்துக்களை அறவே அகற்ற வேண்டும். என்று கூறிய அவர் மக்கள் நேர்மை, உண்மை, தர்மம். ஆகிய பண்புகளுடன் கடமை புரிய வேண்டும். என்றும் கேட்டுக் கொண்டார். (35)

## புலிகள் இராணுவம்கடும்மோதல் இராணுவம் முகாம் திரும்பியது

(மூதூர்)

மூதூர்ப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா படையினருக்குமிடையில் கடுமையான மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சேருவலையிலிருந்து மூதூர் நோக்கிப் புறப்பட்ட படையினரைத் தடுத்து நிறுத்தும் வகையில் தமிழீழ விடுதலைப்

தொடர்ந்தே இந்த மோதல் சம்பவம் இடம்பெறலாயிற்று.

விடுதலைப்புலிகளின்எதிர்த் தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாத படையினர் முகாமிற்கு மீண்டும் திரும்பிச் சென்றுவிட்டனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புலிகள் தடுப்பதால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அர்த்தமில்லை. பாதுகாப்பு நடவடிக்கை எடுங்கள். (58)

## மகளைத் தேடும் தந்தை

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது தமது பதினாறு வயது மகளைத் தவறவிட்ட தந்தை ஒருவர் அகதி முகாம்களில் அவரைத் தேடி அலைகின்றார்.

திருகோணமலை பிறீமா ஆலையில் தொழில் புரியும் திரு. எஸ். பத்மநாதன் என்பவரே மகளைத் தவற விட்ட தந்தையாவார். இவரது மகளான பத்மவதனி என்பவர் க:பொ.த (உ.த) வகுப்பு மாணவியாவார்

திருகோணமலையில் சினேலதா, லதாவின் தாயார் கிதி வீடொன்றில் தங்கிப் படித்த இவர் பற்றியும் இவரது சிநேகிதி திருமதி செல்வரமணி இளைய தம்பி என்போரைப்பற்றியும் எதுவித தகவல்களும் இதுவரை தமக்குத் தெரியாது எனத் தந்தையார் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இதுபற்றிய தகவல் தெரிந்தால் ஈழநாதத்துடன் தொடர்பு கொள்ளவும். (மு)

## தேனீக்கள் அகதிகள் முகாம்

(யாழ்ப்பாணம்)

பிறமாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து தங்குவதற்கு இடம் இல்லாது இருப்பவர்களுக்காக திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பிறமாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து இங்கு வந்து இடம் தெரியாமல் அல்லலுறுபவர்களுக்கு இம்முகாமை அடையாளம் காட்டுமாறு முகாமைப் பராமரித்து வரும் 'தேனீக்கள்' எனும் யூனிவேர்சல் சமூக சேவைப்பிரிவு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

## அகதிகளுக்கு ஒரு நாள் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த அகதிகளுக்கு சுண்டுக்குளி குயின் சலூன் தொழிலாளர்கள் தமது ஒரு நாள் ஊதியத்தை வழங்க முன்வந்துள்ளனர்.

இதேபோலஏனைய தொழிலாளர்களும் அகதிகளுக்கு தம்மாலான உதவிகளை செய்ய வேண்டும் என்று இவர்கள் கேட்கின்றனர்.

---

...ளால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சிற்றூர் அவைகள் மூலம் நடாத்தப்படவுள்ள கூட்டங்கள் வருமாறு:

| சிற்றூர் அவை | நடைபெறும் திகதி | நடைபெறும் இடம் |
|---|---|---|
| அச்செழு | 6. 7. 90 | சைவப்பிரகாச வித்தியாசாலை |
| புத்தூர் கிழக்கு | 7, 8. 7. 90 | சோமாஸ்கந்தா கல்லூரி |
| புத்தூர் மேற்கு | 9, 10. 7. 90 | ,, ,, |
| ,, ,, | 11. 7. 90 | நவக்கிரி அ. மி. த. க. பாடசாலை |
| ஆவரங்கால் | 12. 7. 90 | இராமலிங்கம் வித்தியாசாலை |
| அச்சுவேலி தெற்கு | 13. 7. 90 | சரஸ்வதி வித்தியாசாலை |
| அச்சுவேலி வடக்கு | 14. 7. 90 | அச்சுவேலி மகாவித்தியாலயம் |
| கதிரிப்பாய், தம்பாலை | 15. 7. 90 | சுப்பிரமணிய வித்தியாசாலை |
| வாதரவத்தை | 16. 7. 90 | விக்னேஸ்வரா வித்தியாசாலை |
| கோப்பாய் வடக்கு | 17, 18. 7. 90 | சரவணபவானந்தா வித்தியாசாலை |
| கோப்பாய் தெற்கு | 19. 7. 90 | நாவலர் பாடசாலை |
| ,, ,, | 20. 7. 90 | கோப்பாய் மகாவித்தியாலயம் |
| உரும்பிராய் வடக்கு, மேற்கு | 21, 22. 7. 90 | சைவத்தமிழ் வித்தியாலயம் |
| உரும்பிராய் கிழக்கு, தெற்கு | 23, 24. 7. 90 | ,, ,, |
| ஊரெழு | 25. 7. 90 | கணேச வித்தியாசாலை. |

## இடம்மாற்றம்

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சுற்றயல்கூறுப்பகுதி தற்போது தற்காலிகமாக பளையில் இயங்கி வருகிறது. ஆகவே சகல வெளிக்கள ஊழியர்களும் பளைப்பணிமனைக்கு உடனடியாகசமுகமளிக்குமாறு கிளிநொச்சி சுற்றயல்வைத்திய அதிகாரி வேண்டிக்கொண்டுள்ளார். (லோ

### காவல் அரண்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை கதிரவெளி பகுதியில் சிறிலங்கா விமானங்கள் அகோர குண்டுவீச்சு தாக்குதல்கள் நடாத்தியதில் தா. கருணாகரன் என்ற பன்னிரெண்டு வயது சிறுவனும், சி. நிர்மலாதேவி என்ற ஆறு வயதுசிறுமியும், கந்தன் என்ற அறுபது வயது முதியவருமாக மூவர் சொல்லப்பட்டுள்ளனர். (லோ)

### 331 முகாம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கானை, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள அகதி முகாம்களுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கமும், போரூட் (யாழ்ப்பாணம் மேற்கு) என்பனவும்;

வடமராட்சி தென் மேற்கு (கரவெட்டி) வடமராட்சி ஆகிய பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள அகதி முகாம்களுக்கு போரூட் (யாழ்ப்பாணம் கிழக்கு) நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து உதவிகளை வழங்கி வருகின்றன.

### 6 இலட்சம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாலையின் இரு எண்ணெய் தாங்கிகள் தீப்பற்றிக்கொண்டன.

இவ் இரு எண்ணெய் தாங்கிகளிலும் ஆறுஇலட்சம் லீற்றர் மசகு எண்ணெய் இருந்ததாகத் தெரிகின்றது.

## பல்கலைக்கழக மாணவிகள் அமைத்த பதுங்கு குழி

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவிகள் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பதுங்கு குழிகளை அமைக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள்.

பதுங்கு குழி அமைக்கும் முயற்சியில் முதற்கட்ட நடவடிக்கையாக நேற்றைய தினம் பொதுமக்கள் தமது அன்றாடத் தேவைக்காகக் கூடும் இடமான புங்கன்குளம் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் பதுங்கு குழி ஒன்றை அமைத்தார்கள் இவர்களின் முயற்சியைக் கண்ணுற்ற பொதுமக்களும், தனியார் கல்வி நிலைய மாணவர்களும் பதுங்குகுழி அமைக்கும் பணியில் இவர்களுக்கு உதவினார்கள்.

## கடற்படையினர் தொடர்ந்து ஷெல் தாக்கு; வீடுகள் சேதம்

(வல்வெட்டித்துறை)

வல்வைக் கடற் பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்காக் கடற்படையினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கித் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். பலரின் வீடுகள் பலத்த சேதம் அடைந்தது பொது மகன் ஒருவரும் காயமடைந்தார்.

நேற்று முன் தினம் (4. 7. 90) புதன்கிழமை நண்பகல் 12.45 மணியளவில் மேற்படி சம்பவம் நடைபெற்றது.

இவை பற்றி மேற்படி கடற் பிராந்தியத்தில் ஆறு கப்பல்கள் நின்றபோதும் இரு கப்பல்களில் இருந்து கடற்படையினர் கரைக்கு அண்மையாக உள்ள வீடுகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். மேற்படி தாக்குதலால் வல்வைச் சுங்கப் பகுதிக்கு அண்மையாக உள்ள திருமதி சோதிலிங்கம் சந்திரவதனா திருமதி சங்கரநாதன் புஸ்பம் ஆகியவர்களின் வீடுகள் பலத்த சேதமடைந்தன. மேலும் சுங்கப் பகுதிக்கு அண்மையாக நின்ற ஒரு பொது மகன் ஒருவர் காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (68)

## சங்கானையில் 15 அகதி முகாம்கள்

(சங்கானை)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதினைந்து அகதி முகாம்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இம் முகாம்களில் மொத்தம் 4988 குடும்பங்கள் அகதிகளாகத்தங்கியுள்ளார்கள் என்றும். உலர் உணவுப் பண்டங்களை கூட்டுறவுக் கடைகளில் இவர்கள் பெறக்கூடியவகையில் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக சங்கானை உதவி அரசாங்க அதிபர் து-வைத்திலிங்கம் தெரிவித்தார்.

இம் முகாம்களில் தெல்லிப்பளை, கட்டுவன், பலாலிஆகிய இடங்களைச்சேர்ந்த அகதிகளே அதிகமாகக் காணப்படுகின்றனர். மனித நேய ஸ்தாபனங்களும் இவர்களது உணவு, மருத்துவ தேவைகளைக் கவனித்துவருகின்றன.

---

ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு நிர்வாக உறுப்பினர் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

### புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலின் போது முன்னின்று இராணுவத்தினரை எதிர்கொண்டு போராடிய கப்டன் திலகன் வீரமரணம் அடைந்துள்ளார் என்பது குறிப்பிடதக்கதாகும். (லோ)

### டில்லி சென்ற

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குடிமக்கள் வாழும் பகுதிகளில் குண்டுவீசித் தாக்குவது சம்பந்தமாகவும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது சம்பந்தமாகவும் பெர்னார்ட் திலகரத்தினா கொடுத்த விளக்கம் இந்திய அரசுக்குத் திருப்தியளிக்கவில்லையென்று அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரிவருகிறது.

**குஜ்ரால் பயணம் ஒத்திவைப்பு**

இலங்கை - இந்திய கூட்டுப் பொருளாதாரக் குழுக் கூட்டம் இம்மாத இறுதியில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் தலைமையில் கொழும்பில் நடைபெறவிருந்தது. இலங்கையில் இப்போதுள்ள நிலைமைகாரணமாக குஜ்ரால் கொழும்பு செல்லும் தமது பயணத்தை இவ்வருட இறுதிக்குப் பின் போட்டு விட்டார்.

இதனால் இலங்கையிலிருந்து சுமார் ஒரு லட்சம் மலையகத் தோட்டத்தொழிலாளரை நாடுகடத்தும் பிரச்சினையும் இப்போதைக்கு விவாதிக்கப்பட மாட்டாது.

**கருணாநிதியையும் சந்திக்கவில்லை!**

தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியையும் சந்தித்து இலங்கையின் உண்மை நிலை பற்றி விளக்கிக்கூறி இதில் தலையிட வேண்டாமென்று கேட்கப் போவதாகத் தெரிவித்திருந்த பெர்னாட் திலகரத்தினா கடைசியில் கலைஞர் கருணாநிதியைச் சந்திக்கமுடியாமலே திரும்புகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி, திரு. வி. என் தண்டாயுதபாணி உட்பட பல முக்கிய தலைவர்கள் பேசவுள்ளதுடன்; அனைத்திந்திய அ. தி. மு. கவைச் சேர்ந்த பல முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்கள்.

---

...பொறுப்பாளர் திரு பாப்பா பொதுமக்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

...உண்மை, தர்மம். ஆகிய பண்புகளுடன் கடமை புரிய வேண்டும். என்றும் கேட்டுக் கொண்டார். (35)

## புலிகள் இராணுவம்கடும்மோதல் இராணுவம் முகாம் திரும்பியது

(மூதூர்)

மூதூர்ப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா படையினருக்குமிடையில் கடுமையான மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சேருவலையிலிருந்து மூதூர் நோக்கிப் புறப்பட்ட படையினரைத் தடுத்து நிறுத்தும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தோப்பூரில் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலை தொடர்ந்தே இந்த மோதல் சம்பவம் இடம்பெறலாயிற்று.

விடுதலைப்புலிகளின்எதிர்த் தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாத படையினர் முகாமிற்கு மீண்டும் திரும்பிச் சென்றுவிட்டனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மாற்று . . .

சுற்றிக் கொண்டு மறு தலைப்பை வெய்யிலில் உலரவிட்ட பரிதாபக் காட்சி கண்ணுற்ற பலர் கண்ணீர் சிந்தினர். (58)

### 50,000 மீனவர் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர். இதனால் கரையோரத்தை அண்டி வாழும் மீன்பிடி தொழிலை பிரதானமாகக் கொண்ட மக்கள் பொருளாதார ரீதியாக முடக்கப்பட்டுள்ளனர். (லோ)

### தமிழ் நாட்டில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளாக வந்துள்ளார்கள். என்றும்: கடந்த மூன்று மாத இடைவெளிக்குள் மாத்திரம் மொத்தமாக 5000 பேர் வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

### புடைவைக்கடை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடை பூட்டப்பட்டிருந்த நேரத்தில் பின்கதவைஉடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த கொள்ளையர் 80 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான புடைவைகளை அபகரித்துச் சென்றுள்ளனர். மேற்படி கடை அண்மையில் தான் திறக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (75)

### புலிகள் தடுப்பதால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி வைத்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அந்த வைத்திய சாலைகளில் அப்பாவி தமிழ் மக்களுக்கு சிகிச்சை அளிக்க அனுமதி மறுத்து வருவதாகவும்; கொழும்பிலிருந்து வடக்கு, கிழக்கு நோக்கி அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருட்களை விடுதலைப் புலிகள் வழியில் பறித்து விடுவதாகவும் அங்கு தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பகுதியில் விடுதலைப் புலிகள் காடுகளை எரித்துள்ளதாகவும்; விமானப் படையினர் அவர்களை வானிலிருந்து கண்டதாகவும் அங்கு கூறிய அமைச்சர் வடக்கு, கிழக்கு மக்களை இந்தியாவுக்கு அகதிகளாக அனுப்பி வைக்கும் நோக்குடனேயே அரசாங்கத்தின் உணவு விநியோகத்தை புலிகள் தடுத்து நிறுத்தி வருவதாகவும் கூறினார்.

இவ்வாறு அகதிளாக இந்தியா சென்ற அகதிகளை கடற்படையினர் மறித்து அவர்களுக்கு ஆறுதல் அளித்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்கே அனுப்பி வைத்துள்ளதாகவும் திரு. ரஞ்சன் அங்கு தெரிவித்துள்ளார்.

## இன்று தேர்

(நல்லூர்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறுகிறது.


## பூசகர் | குருக்கள் தேவை

சாவகச்சேரி, சங்கத்தானை இத்தியடி வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் பூசை செய்வதற்குப் பூசகர் | குருக்கள் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதி உண்டு. தகுந்த வேதனம் வழங்கப்படும்.

V. மகாலிங்கம்,
செயலாளர்.

தொடர்புகட்கு:

V. S. சபாரட்னம் & சன்ஸ்,
(நகைமாளிகை)
ஆலய பரிபாலன சபை (போஷகர்)
கண்டி வீதி, சாவகச்சேரி.

(B 1225)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.